கனடியத் தமிழர் தேசிய அவை
National Council of Canadian Tamils
Conseil National de Tamouls Canadien

## *கனடியத் தமிழர் தேசிய அவை விடுக்கும் அவசர வேண்டுகோள்*

எதிர்வரும் நாட்களை தென் தமிழீழத்தில் தொடர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துயர் துடைக்கும் நாட்களாக மாற்றுவோம்.

தென் தமிழீழத்தில் பல பகுதிகள் வெள்ளத்தின் பிடியில் சிக்கியுள்ளன. குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கனமழை காரணமாக ஆயிரக்கணக்கான எம் உறவுகள் எவ்வித உதவிகளும் இன்றி தவிக்கின்றார்கள். குடியிருப்புக்களை விட்டுப் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். சுமார் ஏழு இலட்சம் மக்கள் நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டமே மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

உணவு மருந்து சுகாதாரப் பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கான அவசர மனிதாபிமான நிவாரண உதவியினை உடனடியாக மேற்கொள்ளுவோம்.

உதவி மட்டுப்படுத்தப்பட்டு தவித்துக்கொண்டிருக்கும் எம் தமிழ் உறவுகளுக்கு உடனடியாக உதவிக்கரம் நீட்டுவோம். இங்கிருக்கின்ற ஆலயங்கள், ஊர்ச்சங்கங்கள், பழைய மாணவர்சங்கங்கள், முதியோர் சங்கங்கள் அபிவிருத்திச் சங்கங்கள் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் தமிழ் அமைப்புக்கள் உடனடியாக தாயக மக்களின் உடனடி துயர் துடைப்பில் தங்களின் உதவிக்கரத்தினை நீட்டுமாறு கனடியத் தமிழர் தேசிய அவை உரிமையுடன் வேண்டி நிற்கின்றது.


***கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT)***

**தொலைபேசி: 416-830-7703 | மின்னஞ்சல்: info@ncctcanada.ca**

**முகநூல்: facebook.com/canadianncct**